ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு’தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ பத்துடை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பத்துடை ॥

## அடியவர்க்கு எளியவன்

‡பத்துடை அடியவர்க்கெளியவன்⋆ பிறர்களுக்கரிய
    வித்தகன்⋆ மலர் மகள் விரும்பும்⋆ நம் அரும்பெறல் அடிகள்⋆
மத்துறு கடை வெண்ணெய்⋆ களவினில் உரவிடையாப் புண்டு⋆
    எத்திறம் உரலினொடு⋆ இணைந்திருந்தேங்கிய எளிவே! (1)

எளிவரும் இயல்வினன்⋆ நிலை வரம்பில பல பிறப்பாய்⋆
    ஒளிவரு முழு நலம்⋆ முதல் இல கேடில வீடாம்⋆
தெளிதரும் நிலைமைய-தொழிவிலன்⋆ முழுவதும் இறையோன்⋆
    அளிவரும் அருளினோடு⋆ அகத்தனன் புறத்தனன் அமைந்தே (2)

அமைவுடை அறநெறி⋆ முழுவதும் உயர்வற உயர்ந்து⋆
    அமைவுடை முதல் கெடல்⋆ ஒடிவிடை அற நிலம் அதுவாம்⋆
அமைவுடை அமரரும்⋆ யாவையும் யாவரும் தானாம்⋆
    அமைவுடை நாரணன் மாயையை⋆ அறிபவர் யாரே (3)

யாரும் ஓர் நிலைமையன் என⋆ அறிவரிய எம் பெருமான்⋆
    யாரும் ஓர் நிலைமையன் என⋆ அறிவெளிய எம் பெருமான்⋆
பேரும் ஓர் ஆயிரம்⋆ பிற பல உடைய எம் பெருமான்⋆
    பேரும் ஓர் உருவமும்⋆ உளதில்லை இலதில்லை பிணக்கே (4)

பிணக்கற அறுவகைச் சமயமும்⋆ நெறியுள்ளி உரைத்த⋆
    கணக்கறு நலத்தனன்⋆ அந்தமில் ஆதியம் பகவன்⋆
வணக்குடைத் தவநெறி⋆ வழிநின்று புறநெறி களைகட்டு⋆
    உணக்குமின் பசையற!⋆ அவனுடை உணர்வு கொண்டுணர்ந்தே (5)

உணர்ந்துணர்ந்திழிந்தகன்று⋆ உயர்ந்துருவியந்த இந்நிலைமை⋆
    உணர்ந்துணர்ந்துணரிலும்⋆ இறை நிலை உணர்வரிதுயிர்காள்!⋆
உணர்ந்துணர்ந்-துரைத்துரைத்து⋆ அரி அயன் அரன் என்னும் இவரை⋆

www.prapatti.com

உணர்ந்துணர்ந்-துரைத்துரைத்து⋆ இறைஞ்சுமின்
மனப்பட்டதொன்றே (6)

ஒன்றெனப் பலவென⋆ அறிவரும் வடிவினுள் நின்ற⋆
நன்றெழில் நாரணன்⋆ நான்முகன் அரனென்னும் இவரை⋆
ஒன்றநும் மனத்துவைத்து⋆ உள்ளிநும் இரு பசை அறுத்து⋆
நன்றென நலம் செய்வது⋆ அவனிடை நம்முடை நாளே (7)

நாளும் நின்றடு நம பழமை⋆ அங்கொடு வினையுடனே
மாளும்⋆ ஓர் குறைவில்லை⋆ மனனக மலம் அறக் கழுவி⋆
நாளும் நம் திருவுடை அடிகள் தம்⋆ நலங்கழல் வணங்கி⋆
மாளும் ஓரிடத்திலும்⋆ வணக்கொடு மாள்வது வலமே (8)

வலத்தனன் திரிபுரம் எரித்தவன்⋆ இடம்பெறத் துந்தித்
தலத்து⋆ எழு திசைமுகன் படைத்த⋆ நல்லுலகமும் தானும்
புலப்பட⋆ பின்னும் தன் உலகத்தில்⋆ அகத்தனன் தானே
சொலப் புகில்⋆ இவை பின்னும் வயிற்றுள⋆ இவை அவன்
துயக்கே (9)

துயக்கறு மதியில் நன்ஞானத்துள்⋆ அமரரைத் துயக்கும்⋆
மயக்குடை மாயைகள்⋆ வானிலும் பெரியன வல்லன்⋆
புயற்கரு நிறத்தனன்⋆ பெரு நிலங்கடந்த நல் அடிப் போது⋆
அயர்ப்பிலன் அலற்றுவன்⋆ தழுவுவன் வணங்குவன்
அமர்ந்தே (10)

‡அமரர்கள் தொழுதெழ⋆ அலை கடல் கடைந்தவன் தன்னை⋆
அமர் பொழில் வளங்குருகூர்ச்⋆ சடகோபன் குற்றேவல்கள்⋆
அமர் சுவை ஆயிரத்து⋆ அவற்றினுள் இவை பத்தும் வல்லார்⋆
அமரரோடுயர்வில் சென்று⋆ அறுவர் தம் பிறவியஞ்சிறையே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com